[திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்] [1992 எப்ரல் 23

(2) இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின், 1977-78 மற்றும் 1978—79 ஆம் ஆண்டுகளுக்கான வருவாய் வர வினங்களின் மீதான அறிக்கையில் வணிக வரிகள் மற்றும் அறநிலையத்துறை மீதான பொதுக் கணக்குக் குழுவின் இருபத்தொன்றாவது அறிக்கை (ஏழாவது பேரவை) மற்றும் நாற்பத்தி எட்டாவது அறிக்கை (எட்டாவது பேரவை)யில் மேலும் தொடரப்பட்ட பரிந்துரைகளின் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் பற்றிய நாற்பத்தெட்டாவது அறிக்கையை அளிக்கிறேன்.

(3) இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1966-67 முதல் 1971—72 வரையிலான ஆண்டுகளுக்கான (சிவில்) அறிக்கைகளின் மீது பொதுக் கணக்குக் குழு அளித்த முந்தைய அறிக்கைகள் நான்காவது அறிக்கை (ஏழாவது பேரவை) மற்றும் பத்தாவது அறிக்கை (எட்டாவது பேரவை)யில் தொழில் துறை குறித்து மேலும் தொடரப்பட்ட பரிந்துரைகளின் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் பற்றிய நாற்பத்தொன்பதாவது அறிக்கையை அளிக்கிறேன்.

(இ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். திரு. கி. தர்மலிங்கம், பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர்.

திரு. கி. தர்மலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது நிறுவனங்கள் குழுவின் சார்பாக, இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின், 1980-81 ஆம் ஆண்டுக்கான அறிக்கையில் (சிவில்) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் தொடர்பான பத்திகள் மீது, பொது நிறுவனங்கள் குழு, (1989-90) அளித்த ஆறாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகள் மீது அரசு மேற் கொண்டு எடுத்த நடவடிக்கை பற்றிய குழுவின் 47-வது அறிக்கை, மற்றும், இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1982-83 மற்றும் 1983-84 ஆம் ஆண்டுகளுக்கான அறிக்கைகளில் வணிகம், தொழில்துறை தொடர்பான பத்திகள் மீதான பொது நிறுவனங்கள் குழுவின் (1989-90) 17-வது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது, அரசு எடுத்த நடவடிக்கை பற்றிய குழுக்கள் 48-வது அறிக்கை மற்றும் இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1981-82 ஆம் ஆண்டுக்கான அறிக்கையில் (சிவில்) நகராட்சி நிர்வாகம், மற்றும் குடிநீர் வழங்கு துறை தொடர்பான பத்திகள் மீது பொது நிறுவனங்கள் கு (1985-86) அளித்த 20-வது அறிக்கையில் கண்டு ழு

[திரு. கி. தர்மலிங்கம்]

பரிந்துரைகளின் மீது அரசு எடுத்த நடவடிக்கை பற்றிய குழுவின் 49-வது அறிக்கை, மற்றும் இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1983—84 ஆம் ஆண்டுக்கான அறிக்கையில், வணிகம், போக்குவரத்துத் துறை தொடர்பான பத்திகள் மீது பொது நிறுவனங்கள் குழு (1989—90) அளித்த 46-வது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு எடுத்த நடவடிக்கைகள் பற்றிய குழுவின் 50-வது அறிக்கை.

மற்றும் 1960—61 மற்றும் 1962—63 முதல் 1969—70 வரையிலான ஆண்டுகளுக்குரிய தமிழ்நாடு அரசு கணக்குகள் குறித்த பொது நிறுவனங்கள் குழு தொடர்பான பத்திகள் பற்றிய குழுவின் (1986—87) முப்பத்தி நான்காவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகள் மீது அரசு மேற்கொண்டு எடுத்த நடவடிக்கை பற்றிய குழுவின் ஐம்பத்தொன்றாவது அறிக்கை ஆகியவற்றை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

முற்பகல் 11-20

(ஈ) பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறிக்கையை அளித்தல். திரு. ஏ. ஏகாம்பர ரெட்டி, பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் தலைவர்.

திரு. ஏ. ஏகாம்பர ரெட்டி ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் 1991—92 ஆம் ஆண்டிற்கான ஒன்பதாவது அறிக்கையினை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

6. அரசினர் சட்டமுன்வடிவுகள்—(அறிமுகம் செய்தல்).

(அ) வழக்குரைஞர் நல நிதியச் (திருத்த) சட்ட முன்வடிவு, 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசினர் சட்டமுன்வடிவுகள் அறிமுகம் செய்தல். 1992-ஆம் ஆண்டு தமிழ்நாடு வழக்குரைஞர் நல நிதியச் (திருத்த) சட்ட முன்வடிவு. இதனைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய மாண்புமிகு சட்ட அமைச்சர் அனுமதி கோருவார்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,